සෞඛ්‍ය අමාත්‍යාංශය

ශ්‍රී ලංකා ත්‍රිපෝෂ ලිමිටඩ්

ர்றஹஜஹஉ மஇகரஷர்

,யதஷஇற ஜபஉபந்கஹஆ றகஷகடப

Ministry of Health

Sri Lanka Thriposha Ltd.

ත්‍රිපෝෂ
THRIPOSHA
திரிபோஷ











වාර්ෂික වාර්තාව
ஆண்ட றிக்கை
Annual Report

2018

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

வருடாந்த அறிக்கை - 2018

		பக்கம்
01.	எமது தொலைநோக்கு / செயற்பணி	01 - 02
02.	தவிசாளரின் செய்தி	03
03.	பணிப்பாளர் சபை	04
04.	திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்	05
05.	கணக்காய்வு, முகாமைத்துவ மற்றும் கொள்வனவுக் குழு	06
06.	திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்	07
07.	மனித வளங்கள் பகுப்பாய்வு	08 - 09
08.	பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பற்றிய விபரங்கள்	10
09.	உற்பத்தி தகவல்களும் எதிர்பார்க்கப்படும் இலக்குகளும்	10 - 13
10.	திரிபோஷ விநியோக செயற்பாடும் தகவல்களும்	14 - 17
11.	சந்தைப்படுத்தல் பிரிவு	18
12.	2018 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் வெற்றிக்கான முன்மொழிவுகளும்	19 - 20
13.	இறுதி இலக்கு	21
14.	நன்றி	21
15.	வருடாந்த நிதிக் கூற்று	22 - 48
16.	கணக்காய்வாளரின் அறிக்கை	49 - 56

தொலைநோக்கு

இலங்கைவாழ் மக்களை

போஷாக்குமிக்க,

ஆரோக்கியமுள்ள,

சுபீட்சமான மற்றும்

அபிமானம்மிக்க

சமூகமொன்றாக

உருவாக்குதல்

செயற்பணி

போஷாக்குமிக்க திரிபோஷா மேலதிக உணவை சுகாதார வழிமுறைகளைப் பேணி தயாரித்து இலக்கிடப்பட்ட பயனாளர்களுக்கு இலவசமாக வழங்கி ஆரோக்கியமுள்ள சமூகமொன்றை உருவாக்கும் செயற்பணிக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் ஒட்டுமொத்த இலங்கைவாழ் மக்களினதும் போஷணை தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு போஷாக்குள்ள மேலதிக உணவை சந்தைக்கு அறிமுகம் செய்வதும் அவ்வாறே இந்த அனைத்து உற்பத்திகளுக்குமான பிரதான மூலப்பொருள் வழங்குநரான உள்நாட்டு விவசாயியை வலுவூட்டுவதும் நோக்கமாகும்.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி தவிசாளரின் செய்தி



சுகாதார அமைச்சின் கீழ் பூரணமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றாக 2011 ஆம் ஆண்டில் இலங்கை திரிபோஷா கம்பனி நிறுவப்பட்டதிலிருந்து அதன் பிரதான நோக்கம் போஷாக்குமிக்க ஆரோக்கியமுள்ள சமூகத்தை உருவாக்கும் தேசிய செயற்பணியை நிறைவேற்றும் பொருட்டு திரிபோஷா துணை உணவை உற்பத்திசெய்து சுகாதார சிகிச்சை நிலையங்கள் ஊடாக இலங்கையில் வாழும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதுக்கு குறைந்த நிறை குன்றிய பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றது. 2015 ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்றதிலிருந்து அந்த இலக்கை அடைந்துகொள்ள முடியுமாகியது.

அவ்வாறே கம்பனியின் பிரதான நோக்கமாக இருந்தது சந்தைக்கு வர்த்தக ரீதியான உற்பத்திகளை (Commercial Products) அறிமுகப்படுத்தி அரசாங்கத்தின் உதவியினால் இயங்கும் நிறுவனமொன்றாக அன்றி அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நிறுவனமாக திகழ்வதாகும். சுபோஷ உற்பத்தியை சந்தைக்கு அறிமுகப்படுத்தி இலாபமீட்டுவதன் மூலம் இந்த கடினமான இலக்கை மூன்று வருட மிகக் குறுகிய காலத்திற்குள் என்னால் வெற்றிகொள்ள முடிந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதன் பொருட்டு பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள், கௌரவ சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித்த சேனாரத்ன அவர்கள், பணிப்பாளர் சபை உட்பட சகல ஆளணியினர் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான உற்பத்திற்கு உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குகின்ற எனது வழங்குநர்கள் மற்றும் எமக்கு பலவிதத்திலும் உதவி புரிந்த அனைவரையும் நன்றியுணர்வுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

எம்.டி.பந்துசேன
தலைவர்
வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

பணிப்பாளர் சபை - 2018

- தவிசாளர் - திரு. எம்.டி.பந்துசேன

- பணிப்பாளர் - மருத்துவர் (திரு) அனில் ஜாசிங்க
  சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் -
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன
  சமூக மருத்துவ நிபுணர்
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - சட்டத்தரணி செல்வி எச்.எம். சமிந்திகா ஹேரத்
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - திருமதி தேஜா ஹேரத்
  சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்
  கைத்தொழில் தொழினுட்ப நிறுவனம்.

- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி தமயன்தி ஹபுகொட
  சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்
  பாணத்துறை பொது வைத்தியசாலை.

- பணிப்பாளர் - திரு தர்ஷன விஜேசிறிவர்தன
  சிரேஷ்ட உதவிச் செயலாளர்
  நிதி மற்றும வெகுசன ஊடக அமைச்சு

- அவதானிப்பாளர் - திருமதி. எம்.ரி.ஆர். சித்திரலதா
  பிரதான கணக்காளர்,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

- திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்
  பணிப்பாளர் சபையின் செயலாளர்.

திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்

*	முகவரி	-	த.பெ.17, நீர்கொழும்பு வீதி, கப்புவத்த, ஜா-எல
*	தொலைபேசி இலக்கம்	-	0112 - 236588, 0112 - 237418, 0112 - 233451
*	பெக்ஸ் இலக்கம்	-	0112 - 237363
*	மின்னஞ்சல் முகவரி	-	thriposha@gmil.com
*	அமைச்சு	-	சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
*	நிறுவனத்தின் தன்மை	-	சுகாதார அமைச்சின் கீழ் முழுமையான அரசுடைமை கம்பனி
*	கம்பனியின் பதிவு இலக்கம்	-	PB/3873
*	பிரதான உற்பத்தி	-	போஷாக்கு நிறைந்த ஆரோக்கியம் மிக்க திரிபோஷா துணைஉணவு மற்றும் விற்பனைக்காக சுபோஷ உணவு
*	விநியோக நிலையம்	-	நாடுபூராகவுமுள்ள சுகாதார மருத்துவ நிலையங்கள் பெருந்தோட்டங்கள் சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு நிலையங்கள்
*	விநியோகிக்கப்படும் முறை	-	புகையிரத சரக்குப் பெட்டிகள் மற்றும் லொறிகள் மூலம்
*	பயனாளிகள்	-	கர்பிணித் தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்கள் போஷாக்குத் தேவைப்படும் குழந்தைகள் சில நோயாளிகள்
*	மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை	-	பத்துலட்சத்தை விஞ்சியுள்ளது
*	வங்கி	-	இலங்கை வங்கி
*	கணக்காய்வாளர்கள்	-	கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் திணைக்களம் இல 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு - 2018

*	திரு தர்ஷன சிறிவர்தன தவிசாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி		*	திருமதி. என்.எல். ஜயசிங்க உதவி கணக்காளர், ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
*	மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி		*	திரு.எல்.ஜே.எஸ்.பிரேமசந்திர ஏற்பாட்டாளர் - கணக்காய்வு முகாமைத்துவக் குழு. உள்ளக கணக்காய்வாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
*	சட்டத்தரணி செல்வி எச்.எம். சமிந்திகா ஹேரத் உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி			
*	திருமதி. என்.என்.கே. திவாகர அவதானிப்பாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்			

பிரதான கொள்வனவுக் குழு

(100 மில்லியன் ரூபா வரை)

- தவிசாளர்,
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
- திருமதி. சீ.பீ.எஸ்.ஐ.பெரேரா
  கணக்காளர் (நிதி) செலவு - 1
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
- மருத்துவர் திருமதி. ரசாஞ்சலி ஹெட்டிஆரச்சி
  பணிப்பாளர் (போஷணை ஒருங்கிணைப்புப் பிரிவு)
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
- திரு.ஏ.எல். பஸ்நாயக்க
  பணிப்பாளர் (பரீட்சை)
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
- திருமதி. தமிதா ரத்நாயக்க
  பணிப்பாளர் - திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்

சிறிய கொள்வனவுக் குழு

(10 மில்லியன் ரூபா வரை)

- சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
- சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளம் மற்றும் சட்டம்)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
- உதவி கணக்காளர்
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்

வரலாறு

1973 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சு மற்றும் கெயா அமைப்புடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்காவிலிருந்து திரிபோஷா இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் பொதிசெய்யப்பட்டு இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு விலைமனு கோரப்பட்டு இலங்கை புகையிலை கம்பனிக்கு திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் பொறுப்பளிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு கெயா நிறுவனம் முழுமையாக இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விலகிக்கொண்டது. 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2010.09.17 ஆம் திகதி வரை இலங்கை புகையிலை கம்பனியினால் சுகாதார அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவம் பேணப்பட்டுவந்தது.

நாட்டின் போஷாக்கின்மையை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் வலுவூட்டும் நோக்கில் திரிபோஷ நிகழ்ச்சித்திட்டம் அமைச்சரவைத் தீர்மானமொன்றின் பிரகாரம் 2010.09.17 ஆம் திகதி 2007 இல 07 கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஸ்ரீ லங்கா திரிபோஷ லிமிடட் எனும் பெயரில் முழுமையாக அராங்கத்திற்குரிய கம்பனியொன்றாக நிறுவப்பட்டது.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் 07 பேரைக்கொண்டு தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி முழுமையாக தனது பொறுப்பைக் கையேற்று 2011.01.01 ஆம் திகதி தனது பணிகளை ஆரம்பித்தது.

தற்போதைய முன்னேற்றம்

2010 ஆம் ஆண்டு அரசாங்கம் யையேற்ற போது இலங்கையில் திரிபோஷா பெற்றுக்கொள்வதற்கு உரிமைப்பெற்ற மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 928,000 ஆகும். இந்தப் பயனாளிகளுக்கு முழுமையாக மாதம் ஒன்றுக்கு தேவையான திரிபோஷவை வழங்குவதற்கு மெ.தொ. 1,392 உற்பத்திசெய்தல் வேண்டும். ஆயினும் மாதாந்த உற்பத்தி மெ..தொ. 725 ஆக இருந்த்தோடு, அது மொத்த தேவைப்பாட்டில் 52% ஆகும்.

2018 ஆம் ஆண்டு மொத்த பயானிகளின் எண்ணிக்கை 1071946 ஆகும். ஒரு மாதத்திற்குத் தேவையான திரிபோஷ அளவு மெ.தொ. 1607 ஆகும். மாதாந்த உற்பத்தி மெ.தொ. 993 ஆகும். அது மொத்தத் தேவைப்பாட்டில் 62% ஆகும்.

இந்த வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சுபோஷ உற்பத்தியின் அளவு மெ.தொ. 2607 ஆகும். சுபோஷ விற்பனை வருமானம் 523 மில்லியன் ஆகும். அதில் செலவினத்திற்காக 369 மில்லின் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சேவை வகுதிகள், பதவிகள் மற்றும் பதவியணி

01.	**சிரேட்ட முகாமையாளர்கள்**			
	•	சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)	01	
	•	சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்)	01	02
02.	**நடுத்தர மட்ட முகாமையாளர்கள்**			
	•	முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை)	01	
	•	முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு)	02	
	•	முகாமையாளர் (நிதி)	01	
	•	முகாமையாளர் (சந்தை ஊக்குவிப்பு)	01	05
03.	**கனிஷ்ட முகாமையாளர்கள்**			
	•	விநியோக உத்தியோகத்தர்	01	
	•	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்	01	
	•	நிதி உத்தியோகத்தர்	01	
	•	வழங்கல் உத்தியோகத்தர்	01	
	•	பண்டகசாலை உத்தியோகத்தர்	01	
	•	களஞ்சியசாலை உத்தியோகத்தர்	01	
	•	உற்பத்தி உத்தியோகத்தர்	03	
	•	நிருவாக உத்தியோகத்தர்	01	
	•	நிதி உத்தியோகத்தர்	01	
	•	பொறியியல் சேவை உத்தியோகத்தர்	01	12
04.	**முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம்)**			04
05.	**முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம் சாராத)**			18
06.	**தொடக்கநிலை சேவைகள்**			
	தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சி பெற்ற)			
	•	சாரதி	07	
	•	மின் தொழினுட்பவியலர்	04	11
	தொடக்கநிலை சேவைகள் (பகுதி தேர்ச்சி)			
	•	கொதிகலன் தொழினுட்பவியலர்	03	
	•	பொருத்துநர்கள்	03	
	•	லேத் மெசின் இயக்குநர்கள்	02	
	•	இயந்திர இயக்குநர்கள்	28	
	•	தரப் பரிசோதகர்கள்	07	
	•	தீயணைப்பு உதவியாளர்	01	
	•	போர்க்லிப்ட் இயந்திர இயக்குநர்	02	46
	தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சியற்ற)			
	•	தோட்டக்காரர்	02	
	•	தொழிலாளர் / அலுவலக உதவியாளர்	02	
	•	பொது தொழிலாளர்	129	
	•	தொழிலாளர் மேற்பார்வையாளர்	01	134
	மொத்தம்			**232**

சேவைகளுக்கு அமைவாக எமது குழு செயற்படும் விதம்

உற்பத்தி தொழிற்சாலை (குழுவில் உள்ளோர் - 205)

	பதவி	எண்ணிக்கை
01.	சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)	01
02.	முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை)	01
03.	முகாமையாளர் (தரப் பாதுகாப்பு)	01
04.	பண்டகசாலை உத்தியோகத்தர்	01
05.	உற்பத்தி உத்தியோகத்தர்	03
06.	களஞ்சியசாலை உத்தியோகத்தர்	02
07.	விநியோக உத்தியோகத்தர்	01
08.	பொறியியல் சேவை உத்தியோகத்தர்	01
09.	முகாமைத்துவ உதவியாளர்கள்	14
10.	மின்சார தொழினுட்பவியலர்	04
11.	தீயணைப்பு உதவியாளர்	01
12.	போர்க் லிப்ட் இயந்திர இயக்குநர்	02
13.	தரப் பரிசோதகர்கள்	07
14.	இயந்திர இயக்குநர்கள்	28
15.	லேத் மெசின் இயக்குநர்கள்	02
16.	பொருத்துநர்கள்	03
17.	கொதிகலன் தொழினுட்பவியலர்	03
18.	பொது தொழிலாளர்கள்	130
		205

நிருவாக, கணக்கு மற்றும் ஏனைய கிளைகள்

(குழுவில் உள்ளோர் - 27)

	பதவி	எண்ணிக்கை
01.	சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்)	01
02.	முகாமையாளர் (நிதி)	01
03.	முகாமையாளர் (சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு)	01
04.	நிதி உத்தியோகத்தர்	01
05.	கணக்கு உத்தியோகத்தர்	01
06.	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்	01
07.	நிருவாக உத்தியோகத்தர்	01
08.	வழங்கல் உத்தியோகத்தர்	01
09.	முகாமைத்துவ உதவியாளர்கள்	08
10.	சாரதிகள்	07
11.	அலுவலக உதவியாளர்கள்	02
12	தோட்டக்காரர்கள்	02
		27

2018 ஆம் ஆண்டில் பெறுகை செயல்முறையைப் பின்பற்றி பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் தொடர்பிலான விபரங்கள்

சோயா அவரை மற்றும் சோளம்

எஸ்.டீ.கே.யுனைடட் எக்ரிவென்சஸ்
பிறைவட் லிமிடட்
பண்டுலகம
அனுராதபுரம்,

பால்மா

மில்கோ கம்பனி,
இல.45, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட.

விட்டமின் மற்றும் கனிமங்கள்

ஜே.கே.டிரேட்லிங் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல.44, தலவத்துகொட வீதி,
பிட்டகோட்டை.

மினரல்

வ/ப விக்கிரமரத்ன (தனியார்) கம்பனி

கிராவ்ட் பேப்பர்

அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ் பெகேஜஸ் (பிறைவட்) லிமிடட்
இல,72 மகா வித்தியால வீதி,
கொழும்பு 13.

பொலித்தீன்

வ/ப நிவ் ஜீவா இன்டஸ்ட்ரி (தனியார்) லிமிட்டெட்,
பொல்வத்தை
குண்டசாலை
கண்டி.

வ/ப செல்மோ (தனியார்) லிமிட்டெட்
இல.59/1 நாரம்பொல வீதி,
மொரகல, தெகடன.

வ/ப டபலைன் (தனியார்) கம்பனி

கொரிகேடட் பெட்டி


வ/ப எக்ஸ்பெக் கொரிகேடட் கார்டூன் (தனியார்) கம்பனி

வ/ப குரூப் கிரபிக் ஹவுஸ் (தனியார்) கம்பனி

2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை திரிபோஷ உற்பத்தி (மாஸ்டர் பக்கெட்டுகளில்)

மாதம்	2014	2015	2016	2017	2018
சனவரி	40,316	47,901	57,542	56,236	51,069
பெப்ரவரி	47,708	43,679	53,416	48,288	40,351
மார்ச்	56,917	53,206	55,410	58,150	47,969
ஏப்ரல்	38,492	42,176	44,501	46,956	25,720
மே	56,456	57,367	52,757	49,432	55,122
யூன்	51,654	53,393	15,757	40,134	50,268
யூலை	57,309	61,000	-	48,128	49,042
ஆகஸ்ட்	57,677	57,719	3,060	53,179	40,374
செப்ரெம்பர்	57,621	60,182	38,071	36,295	48,670
ஒக்ரோபர்	58,522	62,381	38,806	27,311	50,036
நவெம்பர்	56,324	60,908	47,392	49,829	47,152
திசெம்பர்	42,072	48,633	28,898	30,017	23,703
மாஸ்டர் பெக்ஸ்	**621,068**	**648,545**	**435,610**	**543,955**	**529,476**
மெற்றிக் தொன்	**13,974**	**14,592**	**9,801**	**12,239**	**11,913**


2014 தொடக்கம் 2018 வரை வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)



2017 ஏப்ரல் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு வரை சுபோஷ உற்பத்தி (மெ.தொ)

மாதம் / வருடம்	2017	2018
சனவரி	-	118
பெப்ரவரி	-	190
மார்ச்	-	296
ஏப்ரல்	49	174
மே	69	112
யூன்	56	261
யூலை	157	277
ஆகஸ்ட்	152	229
செப்ரெம்பர்	157	265
ஒக்ரோபர்	135	300
நவெம்பர்	252	224
திசெம்பர்	180	161
மொத்தம்	**1,207**	**2,607**

2017 ஏப்ரல் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு வரை சுபோஷ உற்பத்தி வரைபடம் மூலம் (மெ.தொ)



2019 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்கு

- இலவசமாக வழங்கப்படும் திரிபோஷ உற்பத்தியை அனைத்து பயனாளிகளுக்கும் வழங்குவதில் 100% இலக்கை வெற்றிகொள்ளல்.
- உள்நாட்டு விவசாயியை மேலும் பாதுகாக்கும் நோகில் அவர்களது உற்பத்திகளை விவசாய சங்கங்கள் ஊடாக திரிபோஷா நிறுவனத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
- எமது சுபோஷ விற்பனை முகவர்களின் வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான பிரதான மூலப் பொருட்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கொள்வனவு செய்து மூலப் பொருள் பற்றாக்குறைக்கு தீர்வு காணல்.
- உற்பத்தி அதிகரிப்புக்கு சமாந்தரமாக திரிபோஷா உற்பத்தியை வினைத்திறனுடனும் சரியாகவும் இலகுவாகவும் பொதிசெய்வதற்கு ஏற்ப வகையில் புதிய பொதியிடல் இயந்திரங்கள் இரண்டை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடனும் உயர் தரத்திலும் மேற்கொள்வதற்கு பின்வருவனவற்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- ✓ குளிரூட்டல் தொகுதியொன்றை தொழிற்சாலைக்குள் நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- ✓ செபரேட்டர் இயந்திரம், ஒட்டோக்லோவ் இயந்திரம், பகட் எலிவேட் இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்.
- ✓ தொழிற்சாலையின் நிலத்திற்கு டைல் பிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தல்.
- ✓ இரண்டு புதிய வண்டிகளை கொள்வனவு செய்தல்.

2019 ஆம் ஆண்டு திரிபோஷ உற்பத்தியை பின்வருமாறு அதிகரிப்பது நிறுவனத்தின் முதன்மை நோக்கமாகும்.

மாதம்	2019	
	மாஸ்டர் பக்கெட்டுகள்	பக்கெட்டுகள்
சனவரி	97,391	2,921,730
பெப்ரவரி	101,711	3,051,330
மார்ச்	110,351	3,310,530
ஏப்ரல்	92,531	2,775,930
மே	96,851	2,905,530
யூன்	114,671	3,440,130
யூலை	118,991	3,569,730
ஆகஸ்ட்	113,591	3,407,730
செப்டம்பர்	113,591	3,407,730
ஒக்டோபர்	113,591	3,407,730
நவம்பர்	105,491	3,164,730
டிசம்பர்	101,711	3,051,330
மொத்தம்	**1,280,472**	**38,414,160**

விநியோக செயற்பாடு

திரிபோஷ தொழிற்சாலை (ஜா-எல)



விநியோக நடவடிக்கைகள் (லொறி, புகையிரத சரக்குப் பெட்டிகள்)







பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள்

சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்

சுகாதார நிலையம் (கிளினிக்)

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

பெருந்தோட்டம்

சிறுவர் நிலையங்கள்







திரிபோஷ பயனாளிகள்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் மூலம் திரிபோஷ உற்பத்தி செய்யப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக முறையாக விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

திரிபோஷ விநியோக நிலையங்கள்

	மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்
1.	மத்திய மாகாணம்
2.	கிழக்கு மாகாணம்
3.	வடமத்திய மாகாணம்
4.	வடமேல் மாகாணம்
5.	வட மாகாணம்
6.	சப்பிரகமுவ மாகாணம்
7.	தென் மாகாணம்
8.	ஊவா மாகாணம்
9.	மேல் மாகாணம்

	பெருந்தோட்டம்
1.	ஹட்டன்
2.	மாத்தளை
3.	கேகாலை
4.	கண்டி
5.	களுத்துறை
6.	நுவரெலியா
7.	மாத்தறை
8.	பதுளை
9.	காலி
10.	இரத்தினபுரி

	பிற
1.	இராணுவ மருத்துவமனை
2.	பொலிஸ் மருத்துவமனைகள்
3.	முன்பள்ளிகள்
4.	நகர சபைகள்
	- நீர்கொழும்பு
	- கொழும்பு
	- மாத்தளை
	- காலி
	- கண்டி

	சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் அதிகார பிரதேசம்
1.	அநுராதபுரம்
2.	பத்தரமுல்லை
3.	பதுளை
4.	காலி
5.	யாழ்ப்பாணம்
6.	திருகோணமலை
7.	குருநாகல்
8.	இரத்தினபுரி
9.	கேகாலை
10.	கண்டி

	பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்		
1.	அம்பாறை	14.	கண்டி
2.	அநுராதபுரம்	15.	கேகாலை
3.	பதுளை	16.	கிளிநொச்சி
4.	மட்டக்களப்பு	17.	குருநாகல்
5.	கொழும்பு	18.	மாத்தளை
6.	காலி	19.	மாத்தறை
7.	கம்பஹா	20.	மன்னார்
8.	அம்பாந்தோட்டை	21.	மொனராகலை
9.	யாழ்ப்பாணம்	22.	நுவரெலியா
10.	கல்முனை	23.	பொலன்நறுவை
11.	களுத்துறை	24.	புத்தளம்
12.	இரத்தினபுரி	25.	வவுனியா
13.	திருகோணமலை		

சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவு							
1.	அம்பாறை	07	10.	கல்முனை	13	19	மாத்தறை 16
2.	அநுராதபுரம்	18	11.	களுத்துறை	13	20	மன்னார் 03
3.	பதுளை	15	12.	இரத்தினபுரி	17	21	மொனராகலை 11
4.	மட்டக்களப்பு	13	13.	திருகோணமலை	10	22	நுவரெலிய 11
5.	கொழும்பு	11	14.	கண்டி	21	23	பொலன்னறுவை 07
6.	காலி	19	15.	கேகாலை	11	24	புத்தளம் 11
7.	கம்பஹா	16	16.	கிளிநொச்சி	04	25	வவுனியா 04
8.	அம்பாந்தோட்டை	12	17	குருநாகல்	23		
9.	யாழ்ப்பாணம்	11	18	மாத்தளை	12		

2018 ஆம் ஆண்டு திரிபோஷா விநியோக தகவல்கள்

பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்	பயனாளிகளின் எண்ணிக்கை	2018 ஆம் ஆண்டு திரிபோஷா விநியோக தகவல்கள்		
		தாய்மார்களுக்கு	குழந்தைகளுக்கு	மொத்தம்
அம்பாறை	29,955	3,133	10,033	13,166
அநுராதபுரம்	60,607	6,874	12,270	19,144
பதுளை	45,380	3,623	13,300	16,923
மட்டக்களப்பு	53,175	3,638	16,729	20,367
கொழும்பு வைத்தியசாலை	5,465	567	2,964	3,531
கொழும்பு மாநகர சபை	12,114	1,760	7,265	9,025
கொழும்பு (தெற்கு)	50,305	9,725	24,528	34,253
காலி	49,140	6,502	12,767	19,269
கம்பஹா	59,426	18,277	26,958	45,235
அம்பாந்தோட்டை	39,953	5,295	16,755	22,050
யாழ்ப்பாணம்	22,577	2,128	7,091	9,219
கல்முனை	49,613	3,831	14,712	18,543
களுத்துறை	36,784	8,469	16,215	24,684
கண்டி	70,054	6,582	12,799	19,381
கேகாலை	29,986	5,994	14,342	20,336
கிளிநொச்சி	10,044	1,342	2,678	4,020
குருநாகல்	74,841	7,679	17,108	24,787
மன்னார்	7,170	1,884	4,549	6,433
மாத்தளை	28,796	3,614	7,749	11,363
மாத்தறை	52,983	7,264	14,335	21,599
மொனராகலை	28,148	3,461	7,989	11,450
நுவரெலிய	32,155	5,320	15,532	20,852

பொலன்னறுவை	28,557	2,870	8,321	11,191
புத்தளம்	29,868	6,160	16,741	22,901
இரத்தினபுரி	46,510	7,022	18,192	25,214
திருகோணமலை	25,385	3,173	7,787	10,960
வவுனியா	10,228	1,222	2,509	3,731
முல்லைத்தீவு	5,038	672	1,344	2,016
மொத்தம்	**994,257**	**138,368**	**336,383**	**474,751**

சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் நிலையம்	பயனாளிகளின் எண்ணிக்கை	2018 - மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு - குழந்தைகளுக்கு
09	23,396	18,684

பெருந்தோட்ட பிரதேசம்	பயனாளிகளின் எண்ணிக்கை	2018 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட திரிபோஷ பேக்		
		தாய்மார்களுக்கு	குழந்தைகளுக்கு	மொத்தம்
ஹட்டன்	10,335	1,487	5,480	6,967
மாத்தளை	2,843	412	1,866	2,278
கேகாலை	4,287	995	2,464	3,459
கண்டி	5,324	915	3,299	4,214
களுத்துறை	2,469	401	1,551	1,952
நுவரெலியா	11,510	2,344	6,694	9,038
மாத்தறை	1,042	138	722	860
பதுளை	10,685	2,020	5,720	7,740
காலி	1,070	164	677	841
இரத்தினபுரி	4,728	923	2,823	3,746
மொத்தம்	**54,293**	**9,799**	**31,296**	**41,095**

2018 ஆம் ஆண்டின் திரிபோஷ விநியோக நிலையங்களின் எண்ணிக்கையும் பயனாளிகளின் எண்ணிக்கையும்

	நிலையங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவுகள் 28 சார்பில்	705	994,257
பெருந்தோட்டம்	416	54,293
சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் திணைக்களத்தின் சிறுவர் இல்லங்கள்	10	23,396
மொத்தம்	**1,131**	**1,071,946**

சந்தைப்படுத்தல் பிரிவு

01. சந்தைப்படுத்தல் பிரிவின் ஆரம்பம்

“அரசாங்க கொள்கைக்கு அமைய வேறு அனுமதிக்கப்பட்ட போஷணைப் பதார்த்தங்களை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல்” ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனி நிறுவப்பட்டதன் இன்னுமொரு நோக்கமாகும். இந்த நோக்கத்தை வெற்றிகொள்ளும் முகமாக 2016 ஆம் ஆண்டில் புதிய இயந்திர சாதனங்கள் நிறுவப்பட்டதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மிகை திரிபோஷா உற்பத்தி “சுபோஷ” எனும் பெயரில் 2017 சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

02. சந்தைப்படுத்தல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்

அரசாங்க நிறுவனம் என்பது நட்டத்தில் இயங்கும் நிறுவனம் என்ற மாயைக்கு சவாலாக அரசாங்கத்திற்கு சுமையின்றிய அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் நிறுவனமாக அன்றி சுயாதீனமாக உழைத்த வருமானத்தின் மீது இயங்கும் இலாபமீட்டும் நிறுவனமாக திகழ்தல்.


03. சந்தைப்படுத்தல் பிரிவின் விரிவாக்கம்

இந்த சுபோஷ உற்பத்தி கிராம் 100, கிராம் 250, கிராம் 500 மற்றும் 750 ஆகிய 04 வகுதியின் கீழ் விற்பனை முகவர்கள் 06 பேர் ஊடாக கண்டி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் ஆரம்பமாக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் இறுதியில் 39 பேரைக் கொண்ட விற்பனை முகவர்கள் வலையமைப்பு ஒன்றின் மூலம் நாட்டின் 11 மாவட்டங்களில் விநியோகிக்கப்படுகின்றது. மேலும் திரிபோஷ கம்பனியின் வளாகத்திற்குள் சுபோஷ மற்றும் ஹைலன்ட் தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்காக விற்பனை அங்காடி ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு சுபோஷ உள்ளிட்ட ஏனைய உற்பத்திகளின் விற்பனையினால் ஈட்டப்படும் வருமானம் ரூ.மில். 574 ஆகும். நிகர இலாபம் ரூ. 120 ஆகும்.

2018 ஆம் ஆண்டில் சுபோஷ விற்பனை வருமானம் (ரூ.000)



2018 ஆம் ஆண்டு நாம் அடைந்த வெற்றிகள், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முகம்கொடுத்த சவால்கள்

2018 ஆம் ஆண்டில் நாம் அடைந்த வெற்றிகள்

01. சுபோஷ விற்பனை முகவர்களின் வலையமைப்பை 42 வரை அதிகரித்தல். இதன் பெறுபேறாக 2018 ஆம் ஆண்டின் விற்பனை வருமானம் ரூ.மில். 523 வரை அதிகரித்துக்கொள்வதன் மூலம் ரூ.மில். 120 இலாபம் உழைத்தல்.

02. சுபோஷ மா மூலம் புதிய கேக் வகையொன்றை அறிமுகம் செய்தல்.

இலக்குகளை அடைந்துகொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

01. உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதற்கு தேவையான பிரதான மூலப் பொருட்களை அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

02. மெ.தொ. 200 சைலொவுக்காக U Type Conveyor தொகுதியொன்றை பொருத்துதல் மற்றும் அதற்கு Pipe Screw Type Conveyor தொகுதியொன்றை பொருத்துதல்.

03. High Efficiency Separator Filter ஒன்றைப் பொருத்துதல்.

04. பொதிசெய்யும அறையிலுள்ள பொதி செய்யும் இயந்திரங்கள் மூன்றுக்காக Thermal Transfer Code பொருத்துதல்.

05. பொதிசெய்யும் பிரிவுக்காக வென் இரும்பினால் தயாரிக்கப்பட்ட திரிபோஷ களஞ்சியப்படுத்துவதற்காக தாங்கி ஒன்றை அமைத்தல்.

06. சுபோஷ விற்பனை நிலையத்தை விரிவுபடுத்தல்.

2018 ஆம் ஆண்டில் முகம்கொடுக்க நேரிட்ட சவால்கள்

01. மிக நீண்ட நாட்கள் துறையில் ஈடுபட்டு வர்த்தப்பெயரை பெற்று சந்தையில் ஏகபோக உரிமையைப் பெற்றுள்ள நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலமை. ஆயினும் உயர் போட்டித் தன்மைக்கு முன்னால் திரிபோஷ வரத்தகக் குறியீட்டுடன் சுபோஷ பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் சந்தையை மற்றும் நுகர்வோரை கவர்வதற்கு முடியுமாக உள்ளது.

02. இந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பாரிய அளவிலான நிறுவனங்கள் பல்வேறுபட்ட பிரச்சார ஊடகங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளுக்கு உயர் பிரச்சாரத்தை வழங்குதல்.

03. வரையறுக்கப்பட்ட காரணிகள் காரணமாக கேள்விக்கான நிரம்பலை வழங்க முடியாமை.

2019 ஆம் ஆண்டின் வெற்றிக்கான முன்மொழிவுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் இலக்குகள்

2019 ஆம் ஆண்டின் வெற்றிக்கான முன்மொழிவுகள்

01. வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப 100% ஐ பூரணப்படுத்துவதற்கு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை தொடர்ந்தும் கொள்வனவு செய்தல்.

02. மூலப்பொருட்கள் தட்டுப்பாடுள்ள காலப் பகுதியில் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு தேவையான மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தல். இதற்காக மெ.தொ. 4000 கொள்ளளவு கொண்ட சைலோ ஒன்றை நிர்மாணித்தல்.

03. திரிபோஷா கம்பனிக்காக வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

04. சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சுபோஷ புதிய உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தல் மற்றும் சந்தைக்கு அறிமுகம் செய்தல்.

05. விற்பனை முகவர் வலையமைப்பை நாடு முழுவதும் விஸ்தரித்தல்.

06. இறுதி உற்பத்தியை உரிய பயனாளிக்கு வழங்கும் பொருட்டு விநியோக நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல் மற்றும் வினைத்திறனாக்கல்.

எதிர்பார்க்கப்படும் இலக்குகள் - 2019

01. விற்பனை வருமானத்தை ரூ.மில். 750 வரை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் அதனை வருடாந்தம் 20% ஆல் அதிகரித்தல். 2019 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் அளவில் விற்பனை வருமானம் ரூ.மில். 368 எல்லையைத் தாண்டிச் செல்லும் வாய்ப்பு உள்ளது.

02. நாட்டின் 24 மாவட்டங்களுக்கும் விற்பனை முகவர் வலையமைப்பை விஸ்தரித்தல்.

இறுதி இலக்கு

அரசாங்கத்திற்கு சுமையாக
இருக்காது அரசாங்கத்திடமிருந்து
உதவிபெறும் நிறுவனமாக அன்றி
சுயாதீனமாக வருமானத்தை
உழைக்கும் நிறுவனமாக திகழ்வது
எமது இறுதி இலக்காகும்.

நன்றி

எல்லோரையும் ஊக்குவித்து தேவையான அறிவுறுத்தல்களையும் அனுசரணையையும் வழங்கியமை தொடர்பில் சுகாதார அமைச்சர் மாண்புமிகு ராஜித்த சேனரத்ன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு பைசல் காசிம் அவர்களுக்கும் எம்மை வழிப்படுத்தி எமக்கு தேவையான ஆலோசனைகளையும் அனுமதிகளையும் காலம் தாழ்த்தாது வழங்கிய சுகாதார அமைச்சின் செயலாளர் திரு அநுர ஜயவிக்கிரம அவர்களுக்கும் மற்றும் வருடம் தோறும் தேவையான ஒதுக்கீடுகளை எமக்கு வழங்கிய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் திரு. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் அங்கம் வகித்த பணிப்பாளர் சபையின் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு எம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அத்துடன் எமது வழங்குநர்கள் உட்பட வெளிவாரியாக எமக்குச் சேவை வழங்கும் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது நிறுவனத்தில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் உள்ள பதவிகளில் திருப்திகரமாக சேவைபுரியும் பதவியணியொன்று காணக்கூடியதாகவுள்ளமை பெருமகிழ்ச்சியாகும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு மெச்சப்படுதல் வேண்டும். இறுதியாக திரிபோஷ நிறுவனத்திற்கென கட்டியெழுப்பப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்து எந்நேரமும் உழைக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் மொத்த பதவியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை திரிபோஷ லிமிடட்

விஸ்தீரண வருமான மற்றும் செலவினக் கூற்று

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்புகள்	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
வருமானம்			
வருமானம்	02	2,806,718,129.68	2,183,706,297
கழிப்பனவு ஃ நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திகளின் செலவினம்	03	(2,230,761,256.16)	(1,904,609,041)
ஃ விற்பனை செலவினம்	04	(424,567,749.72)	(168,059,812)
		151,389,123.80	**111,037,444**
வேறு வருமானம்	05	37,813,850.10	28,982,331
கழிப்பனவு : செலவினம்			
விற்பனை மற்றும் விநியோக செலவு	06	19,710,985.68	21,413,625
நிர்வாகச் செலவுகள்	07	79,340,635.12	54,560,274
நிதி மற்றும் வேறு செலவினம்	08	11,510,380.04	195,624
		110,562,000.84	**76,169,523**
2018 ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம்		**78,640,973.06**	**63,850,252**

இந்த நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 7 தொடக்கம் 27 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த முழுமொத்த வருமானக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

01

இலங்கை திரிபோஷ லிமிடட்

நிதி நிலமைக் கூற்று

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

	குறிப்புகள்	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை சாராத சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	12	655,757,869.75	669,513,546
புலப்படாத சொத்துக்கள்	13	165,296.90	330,594
		655,923,166.65	**669,844,139**
நடைபெறும் மூலதன வேலைகள்	14	22,513,629.40	-
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	15	127,134,727.41	200,083,241
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	16	212,780,368.24	149,350,593
காசும் காசுக்குச் சமமானவைகளும்	17	335,266,293.23	200,216,301
		675,181,388.88	**549,650,135**
மொத்தச் சொத்துக்கள்		**1,353,618,184.93**	**1,219,494,274**
பங்குரிமையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
பின் செலுத்தும் பொறுப்புக்கள்	19	390,085,607.56	395,491,067
மீள் விலைமதிப்பு ஒதுக்குகள்	20	306,378,657.65	306,378,658
செலவிலும் கூடிய திரண்ட வருமானம்		422,306,485.10	343,665,512
மொத்த பங்குரிமை		**1,118,770,750.31**	**1,045,535,237**
நடைமுறை சாராத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு	21	44,898,532.10	42,956,779
மருத்துவ நிதியம்	22	209,446.78	176,422
		45,107,978.88	**43,133,201**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்	23	189,739,455.74	130,825,836
மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும்		**1,353,618,184.93**	**1,219,494,274**

இந் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 7 தொடக்கம் 27 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த நிதி நிலமைக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இந் நிதி நிலமைக் கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

.....

நிதித் தலைவர்

இந் நிதி நிலமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது

....

தலைவர் **பணிப்பாளர்**

ஜா எல, கப்புவத்த

திகதி: 2019.03.14 **ஆம் திகதி**

02

இலங்கை திரிபோஷ லிமிடட்

பங்குரிமை மாற்றக் கூற்று

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	மூலதன ஒதுக்குகள் ரூபா சதம்	மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் ரூபா சதம்	செலவிலும் கூடிய திரண்ட வருமானம் ரூபா சதம்	மொத்தம் ரூபா சதம்
2017.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		380,421,185.26	307,170,027.56	307,683,544.60	995,274,757.42
சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை		70,386,741.08	-	-	70,386,741.08
பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை		(55,316,859.32)	-	-	(55,316,859.32)
அகற்றப்பட்ட சொத்துக்கள் மீது மீள் மதிப்பிடப்பட்ட இலாபம் / நட்டம்			(791,369.91)	-	(791,369.91)
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் 2017		-	-	(27,868,284.10)	(27,868,284.10)
2017 செலவிலும் கூடிய வருமானம்		-	-	63,850,251.54	63,850,251.54
2017.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		**395,491,067.02**	**306,378,657.65**	**343,665,512.04**	**1,045,535,236.71**
2018.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		395,491,067.02	306,378,657.65	343,665,512.04	1,045,535,236.71
சுகாதார அமைச்சிலிருந்து மூலதனக் கொடை	19	50,974,042.59	-	-	50,974,042.59
பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை	19	(56,379,502.03)	-	-	(56,379,502.03)
2018 செலவிலும் கூடிய வருமானம்		-	-	78,640,973.06	78,640,973.06
2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		**390,085,607.58**	**306,378,657.65**	**422,306,485.10**	**1,118,770,750.33**

இலங்கை திரிபோஷ லிமிடட்

காசுப் பாய்ச்சற் கூற்று

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	2018.12.31 ரூபா	2017.12.31 ரூபா
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம்	**78,640,973**	**63,850,252**
சீராக்கங்கள்		
தேய்மானம்	57,664,125	56,009,370
தேய்மான நட்டம்	10,639,533	-
ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு	5,663,671	9,185,605
மருத்துவப் பங்களிப்புக்கான ஏற்பாடு	231,068	98,600
முன்னைய ஆண்டு சீராக்கங்கள்	-	(27,868,284)
	74,198,397	**37,425,291**
தொழிறபடு மூலதனததிறகான மாறறஙகளின முனனரான தொழிற்பாட்டு இலாபம்	**152,839,370**	**101,275,542**
தொழிற்படு மூலதனத்திலான மாற்றங்கள்		
கடன்படுனர் மற்றும் ஏனைய வருமதிகளிலான அதிகரிப்பு /(குறைவு)	(63,429,775)	(77,830,092)
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு /(குறைவு)	58,913,620	113,927,062
இருப்புக்களில் அதிகரிப்பு /(குறைவு)	72,948,513	6,024,838
	68,432,358	**42,121,807**
பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு முன்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	221,271,728	143,397,349
கழிப்பனவு : செலுத்தப்பட்ட பணிக்கொடை	(3,721,918)	(4,087,601)
மருத்துவ நன்மைக் கொடுப்பனவு	(198,044)	(160,857)
வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**217,351,767**	**139,148,892**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்ளல் செய்தல்	(55,024,828)	(60,150,025)
நடைபெறும் மூலதன வேலை	(22,513,629)	-
வட்டி வருமானம்	642,143	848,633
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(76,896,315)**	**(59,301,392)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை	(5,405,459)	15,069,882
காசும் காசுக்குச் சமமான விடயங்களிலான மாற்றங்கள்	135,049,992	94,917,382
முன்கொண்டு வந்த காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	200,216,301	105,298,919
முன்கொண்டு சென்ற காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	**335,266,293**	**200,216,301**
நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட காசும் காசுக்குச் சமமான விடயங்களின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	20,000	20,000
இலங்கை வங்கி - ஜா எல -71324617	29,691,455	13,530,026
இலங்கை வங்கி - ஜா எல கண. இல 80306903	153,631,019	45,902,793
திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு	92,580,625	92,988,272
நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு	59,343,195	47,775,210
	335,266,293	**200,216,301**

04

இலங்கை திரிபோஷ லிமிட்ட்

உற்பத்திக் கணக்கு
2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	31/12/2018 ரூபா சதம்	31/12/2017 ரூபா சதம்
உற்பத்திச் செலவு			
மூலப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள்			
2018.01.01 ஆம் திகதி மீதி		146,784,459.46	151,509,363
கொள்வனவு	09	1,813,404,372.61	1,564,586,324
		1,960,188,832.07	1,716,095,686
2018.12.31 ஆம் திகதி மீதி	15	(88,411,099.24)	(146,784,459)
நுகர்வு மூலப்பொருட்களின் செலவு		**1,871,777,732.83**	**1,569,244,940**
நேரடி உழைப்புச் செலவு மற்றும் முகாமைத்துவசெலவு	10	187,261,754.66	178,601,881
தொழிற்சாலை தலைக்குரிய செலவு	11	162,148,537.19	141,801,206
மீள் பொதியிடல் நட்டம்		(112,656.25)	(2,356)
அடிப்படைச் செலவு		**2,221,075,368.43**	**1,889,645,672**
நடைபெறும் வேலை			
2018.01.01 ஆம் திகதி மீதி		2,388,929.16	8,215,484
2018.12.31 ஆம் திகதி மீதி	15	(12,605,572.55)	(2,388,929)
		(10,216,643.39)	**5,826,555**
மொத்த உற்பத்திச் செலவு		**2,210,858,725.04**	**1,895,472,227**

05

இலங்கை திரிபோஷ லிமிடட்

"சுபோஷ"

விஸ்தீரண வருமான மற்றும் செலவினக் கூற்று

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்புகள்	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
வருமானம்			
வருமானம்	02	574,093,313.58	255,227,932
கழிப்பனவு : விற்பனை செலவினம்	04	(424,567,749.72)	(168,059,812)
		149,525,563.86	**87,168,119**
வேறு வருமானம்	05	5,931,799.46	1,411,833
செலவினம்			
விற்பனை மற்றும் விநியோக செலவு	06	10,262,087.21	5,706,166
நிர்வாகச் செலவுகள்	07	23,647,099.18	2,508,562
நிதி மற்றும் வேறு செலவினம்	08	1,004,580.00	274,328
		34,913,766.39	**8,489,057**
2018 ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம்		**120,543,596.93**	**80,090,895**

06

1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியானது சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முழுமையாக அரசுடமையான கம்பனி ஒன்றாக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தளமும் த.பெ. இல. 17, கப்புவத்தை, ஜா எல, இலங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

1.1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைத் தன்மை

சுகாதார அமைச்சின் "திரிபோஷ விநியோக நிகழ்ச்சித் திட்டம்" சார்பில் "திரிபோஷ" உற்பத்தி செய்யும் ஒரே கம்பனி இந்தக் கம்பனியாகும்.

இந்த கம்பனியின் ஏனைய பிரதான செயற்பாடுகள் பின்வருவனவாகும்:

- இலங்கையில் தாய், சேய் போசாக்கின்மையைக் குறைக்கும் பொருட்டு இலங்கையின் ஊட்டச்சத்துமிக்க குறைநிரப்பு உணவு உற்பத்தியான "திரிபோஷ" வினது மேம்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உதவுதல்.
- சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு விவசாயிகளுக்கான வருமான பிறப்பாக்க வழியினை ஊக்கப்படுத்தல்.
- அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும் வடிவத்திலான ஊட்டச்சத்துமிக்க கலக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பை குறைத்தல்.
- திரிபோஷவின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் வழங்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

1.1.3 பணிப்பாளர் சபை

1. திரு. எம்.டி. பந்துசேன (தலைவர்)
2. வைத்தியர் (திரு) அனில் ஜாசிங்க
3. வைத்தியர் (திருமதி) ஷாந்தி குணவர்த்தன
4. திருமதி எச்.எம். தேஜா ஹேரத்
5. திருமதி சமிந்திகா ஹேரத்
6. வைத்தியர் (திருமதி) தமயந்தி ஹப்புகொட
7. திரு தர்ஷன விஜேசிரிவர்தன
8. திருமதி ரீ.ஆர்.சி. சித்திரலதா (அவதானிப்பாளர்)

சபைச் செயலாளர்

திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்

1.1.4 **கணக்காய்வாளர்கள்**

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல 306/72,பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

1.1.5 **வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி,

ஜா எல

1.1.6 **வெளியீட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கிணங்க வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டது.

1.1.7 **தயாரிப்பிற்கான அடிப்படை**

(அ) ஒத்திசைவுக் கூற்று

வருமானக் கூற்று, முழுமொத்த வருமான மற்றும் செலவினக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றினை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களானவை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் சேர்த்து ("நிதிக் கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்காளர் கம்பனியினால் வெளியிடப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கும் தேவைப்பாட்டுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டிற்கான அடிப்படை

உரிய குறிப்புகளின் கீழ் உண்மைப் பெறுமதி குறித்து பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும் இடங்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்

அளவு, எடுத்துரைப்பு மற்றும் விவரிப்பு சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்களானவை, நிகழ்கால நிதிக் கூற்றுக்களின் புரிந்துகொள்ளலை முன்னேற்றும் பொருட்டும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட சகல தொகைகளுக்குமான முன்னைய காலப்பகுதி தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளானவை, வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலொழிய, இந் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல

காலப்பகுதிக்கும் ஒரே மாதிரியாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களின் முன்னளிப்பு அல்லது விடய உருப்படிகளின் வகைப்பாடானது திருத்தப்பட்டிருக்கும் பொழுது சிறந்த முன்னளிப்பினை வழங்கும் பொருட்டு நிகழ்கால ஆண்டுடன் ஒத்திசைவதற்கென ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்பும்

இக் கம்பனியின் நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்புமாகவுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்ட சகல நிதித் தகவல்களும், வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, கிட்டிய ஆயிரத்துக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

(உ) அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்வுகளைப் பயன்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்வைப்பும் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றைச் செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்துகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட முடிவுகள் என்பற்றை விட வித்தியாசப்படக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் கீழுள்ள எடுகோள்கள் என்பன தொடர்ந்து செல்லும் ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்களானவை, அத் திருத்தமானது குறித்த காலப்பகுதியினை மாத்திரம் பாதித்தால் இம் மதிப்பீடானது திருத்தப்படும் காலப்பகுதியில் அல்லது திருத்தக் காலப்பகுதியிலும் அத்துடன் அத் திருத்தமானது நிகழ்காலப்பகுதியினையும் எதிர்காலப்பகுதியினையும் பாதித்தால் எதிர்காலத்திலும் இனங்காணப்பட்டுள்ளன.

(ஊ) நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிலமை

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நடவடிக்கை என்ற ரீதியில் கம்பனியை தொடர்ந்தும் பேணுவதற்கு அதற்குள்ள ஆற்றல் தொடர்பில் பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை செய்துள்ளது. தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான அளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. அதற்கிணங்க, கம்பனியை செயற்பாட்டு நிலமையில் பேணும் உத்தேசத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

1.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

1.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ) சொத்தினை இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உருப்படிகளானவை திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் அல்லது உண்மைப் பெறுமதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய சகல உருப்படிகளும் ஆரம்பத்தில் திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்து ஒன்றின் முக்கியமான கூறுகளனைவை வெவ்வேறாக இனங்காணப்பட்டு தேய்விடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் முக்கியமான பகுதிகளானவை கால இடைவெளிகளில் பதிலீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது நிறுவனமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை இனங்காணலிலிருந்து நீக்குவதுடன் புதிய பகுதியினை அதன் சொந்த இணைந்த பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு ஆகியவற்றுடன் சேர்த்து இனங்காண்கின்றது. ஏனைய சகல திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(ஆ) கிரயம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலையினையும் மற்றும் அதன் உத்தேச பாவனைக்காக தொழிற்படு நிலையில் அச் சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக விளைந்த ஏதேனும் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் உழைக்கும் ஆற்றலைப் பேணுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கென நிரந்த அடிப்படையில் சொத்துக்களை கொள்ளல் செய்தல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக உறப்படும் அடுத்துவந்த செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

பிரதான பரிசோதிப்பு மற்றும் பிரதான திருத்தச் செலவினம் உள்ளடங்கலாக, வெவ்வேறாக கணக்கிடப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றின் கூறு ஒன்றினை பதிலீடு செய்வதற்கு உறப்படும் செலவினமானது மூலதனமாகக் கருதப்படும். அடுத்துவந்த ஏனைய செலவினமானது, அப் பகுதிக்குள் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளானவை கம்பனிக்கு ஏற்படுவதுடன் அதன் கிரயமானது நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால் மாத்திரமே மூலதனமாகக் கருதப்படும்.

(இ) மீள்மதிப்பீடு செய்தல்

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டு இலங்கை திரிபோஷ கம்பனிக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்கள்,பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(FF) தேய்வு

அத்தகைய சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு (Straight - Line basis) அடிப்படையில் மூலதன ஒதுக்கிற்கு தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

கட்டடங்கள்	20 வருடங்களுக்கு மேல்
பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும்	20 வருடங்களுக்கு மேல்
மோட்டார் வாகனங்கள்	05 வருடங்களுக்கு மேல்
உபகரணம் மற்றும் கருவிகள்	05 வருடங்களுக்கு மேல்
ஆய்வுகூட உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
விவசாய உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
மின்சார வேலைகள்	05 வருடங்களுக்கு மேல்
அலுவலக உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
தளபாடங்களும் பொருத்துகைகளும்	10 வருடங்களுக்கு மேல்
அருவ சொத்துக்கள்	04 வருடங்களுக்கு மேல்

(உ) இனங்கண்ட சொத்தினை நீக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றானது, கையுதிர்ப்பின் பேரில் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாத போது, இனங்காணலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்களின் நீக்கம் தொடர்பான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, அச் சொத்தானது இனங்காணலிலிருந்து நீக்கப்படும் ஆண்டிலுள்ள விஸ்தீரண வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

1.2.2 நடைபெறும் மூலதன வேலை

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். மூலதனமாக்கலினை எதிர்பார்த்து கட்டடங்களின் நிர்மாணிப்பில் நேரடியாக உறப்படும் மூலதன நோக்கம் ஒன்றினைக் கொண்ட செலவினங்களே இவையாகும். மூலதன நடைபெறும் வேலையானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொழுது, அதாவது கம்பனியினால் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படும் ஆற்றலினை இது கொண்டிருப்பதற்கு தேவையான அமைவிடம் மற்றும் நிலையில் உள்ள போது, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உரிய சொத்து வகைக்கு மாற்றப்படும். மூலதன நடைபெறும் வேலையானது ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து, கடன்பெறும் செலவுகள் உள்ளடங்கலாக, கிரயத்தில் எடுத்துரைக்கப்படும்.

1.2.3 அருவச் சொத்துக்கள்

ஓர் அருவச் சொத்தானது, அச் சொத்தின் பண்பினைக் கொண்ட எதிர்கால பொருளாதார நன்மைகளானவை நிறுவனத்திற்கு ஏற்படுவதுடன் அச் சொத்தின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 38 - அருவச் சொத்துக்கள் என்பதற்கு இணங்க நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால், அது இனங்காணப்படும். அதற்கிணங்க, திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து கிரயத்தில் நிதி நிலமைக் கூற்றில் இச் சொத்துக்கள் எடுத்துரைக்கப்படும்.

கணனி மென்பொருளானது நேர்கோட்டு முறையில் 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு கடனழிவு செய்யப்படுகின்றது.

கல்வித்திட்ட அபிவிருத்திக் கிரயமானது 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றது.

1.2.4 இருப்பு ஆவணங்கள்

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகி நகரும் பொருட்களை உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், சராசரிக் கிரயத்தில் இருப்புக்கள் விலைமதிக்கப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் இருப்புக்கள் விற்கப்படக்கூடிய விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

இருப்புக்களை அதன் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைக்கும் கொண்டுவருவதில் உறப்பட்ட கிரயமானது பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-

மூலப் பொருட்கள்	-	கொள்வனவு விலைக்கு
முடிவுப் பொருட்கள் மற்றும் நடைபெறும் வேலை	-	கொள்வனவு விலைக்கு
இடமாறும் பொருட்கள்	-	நேர் மூலப் பொருட்கள், நேர்க் கூலி ஆகியவற்றின் கிரயத்தில் சாதாரண தொழிற்பாட்டின் அடிப்படையில் நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதாசாரம்

மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

1.2.5 சொத்துக்களின் குறைவு

சொத்துக் குறைவு பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதை வரையறுப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின், அதன் பின்னர் சொத்துக்களை மீளப்பெறக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது காசினை உண்டுபண்ணும் அலகானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகரித்தால் குறைவுறு நட்டம் ஒன்று இனங்காணப்படும். மீளப்பெறக்கூடிய தொகையினை வரையறுப்பதற்கு பாவிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்திருப்பின் குறைவுறு நட்டமானது நீக்கப்படும் (மறுதலையாக்கப்படும்).

1.2.6 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனது நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக அல்லது பொருத்தமுடையதாக, பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு ஒன்றில் பாதுகாப்பு ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு பெறப்பட்டனவாக வகைப்படுத்தப்படும். கம்பனியானது ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சகல நிதிச் சொத்துக்களும், சொத்துகள் என்னும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது, கொடுக்கல் வாங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

கடன்களும் வருமதிகளும் வைப்புக்களும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே கம்பனியானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக), கம்பனியானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முடிவடையும் போது அல்லது நிதிச் சொத்தின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் சகலதும் மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலுள்ள நிதிச் சொத்துத் தொடர்பான ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை கம்பனி மாற்றும் போது கம்பனியானது அச் சொத்தினை இனங்காணலிலிருந்து நீக்குகின்றது. கம்பனியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது வேறானதோர் சொத்து அல்லது பொறுப்பாக இனங்காணப்படும்.

கம்பனியானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் முன்னளிக்கப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களானவை காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் அத்துடன் வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

(அ) இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் கொள்ளல் செய்யப்படுவதனால் வியாபாரத்திற்கு வைக்கப்படுவனவாக

அவை வகைப்படுத்தப்படுகின்றன.

முழுமொத்த விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினத்தில் இனங்காணப்பட்ட உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களுடன் சேர்த்து உண்மைப் பெறுமதியிலான நிதி நிலமைக் கூற்றில் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

(ஆ) கடன்களும் வருமதிகளும்

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கலினைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

வியாபார வருமதிகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் ஆகியவற்றை கடன்களும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

(இ) முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன கம்பனியானது அவற்றை முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான சாதகமான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களிலான முதலீடுகளானவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்து முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட அல்லது மேற்போந்த நிதிச் சொத்துக்களின் எந்தவிதமான வகுதிக்குள்ளும் வகைப்படுத்தப்படாத பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களே விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை உண்மைப் பெறுமதியில் அளவிடப்படும் அத்துடன் குறைவுறு நட்டங்களினை விட அதன்கண்ணுள்ள மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் இனங்காணப்பட்டு நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் ஒதுக்கப்பட்ட உண்மைப் பெறுமதியில் முன்னளிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான கடன் ஆவணங்கள் தொடர்பான வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். முதலீடு ஒன்றானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் திரளும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படும்.
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான முதலீடாக ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

1.2.7 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனியானது மதிப்பிடுவதுடன் அத்தகைய குறைவானது நிகழ்ந்திருந்தால் அக் குறைவுறு தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாட்டினைக் கருத்திற்கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

1.2.8 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.
"மறைமுக முறை" யினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுக்குச் சமமான விடயங்களினதும் ஒரு கூறாக வங்கி மேலதிகப்பற்று உள்ளடக்கப்படுகின்றது.

1.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

கேள்வியின் பேரிலான கொடுப்பனவிற்கு அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிலுவையாகவுள்ளவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறை சாராத (நிலையான) பொறுப்புக்களாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிந்த சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கம்பனியானது கொண்டிருக்கும் போது

ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது.

1.3.1 ஊழியர் நலன்கள்

(அ) ஓய்வூதியப் பணிக்கொடை ஏற்பாடு

ஏற்பாட்டினை கணிப்பீடு செய்வதற்காக பாவிக்கப்படும் அடிப்படை எடுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

கழிவிடப்பட்ட வீதம்	12%
எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம்	10%
பணியாட்டொகுதிப் புறழ்வு	02%
ஓய்வுபெறல் வயது	55 வருடங்கள்

தொடர்ந்து செல்லும் வர்த்தக கம்பனியாக இக் கம்பனியானது தொடரும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிறுவனம் ஒன்றானது தனியான நிறுவனம் ஒன்றாக நிலையான பங்களிப்பினைச் செலுத்துவதும் அத்துடன் மேலதிக தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கான சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கொண்டிராததுமான தொழிலுக்குப் பின்னரான திட்டம் ஒன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகளானவை, அவை நிலுவையிலுள்ள போது, முழுமொத்த வருமானக் கூற்றில் செலவு ஒன்றாக இனங்காணப்படும்.

(இ) ஊழியர் சேமலாப நிதியம்

அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் கம்பனியும் ஊழியர்களும் முறையே 12% இனையும் 08% இனையும் பங்களிப்புச் செய்கின்றனர்.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

1.3.2 வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்

வியாபாரம் மற்றும் ஏனைய சென்ம்திகளானவை கிரயத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

1.3.3 வரி விதிப்பு

பங்கிலாபங்கள் அல்லது வட்டி ஆகியவற்றிலிருந்தான மிகை மற்றும் வருமானத்தினை விட இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானம் ஆகியன 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (ixiv) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

1.3.4 பிற்போடப்பட்ட வரி

2006 ஆம் ஆண்டின் 10 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (ixiv) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதனால் இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானமாக, பிற்போடப்பட்ட வரிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.5 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியப்படக்கூடியதாகவில்லாத அல்லது நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடியதாகவில்லாத நிகழ்கால கடப்பாடுகளின் மூலம் மாத்திரமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாக எதிர்பாராத பொறுப்புக்கள் உள்ளன.

இக் கம்பனியின் மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4 விரிவான வருமானக் கூற்று

மூலதன ஒதுக்கு - (மூலதனக் கொடைகளுடன் தொடர்புபட்டவை)

சுகாதார அமைச்சு, கெயார் (CARE) மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் புகையிலைக் கம்பனி ஆகியவற்றினால் வழங்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டிலிருந்து நிதிச் சொத்துக்கள் மீது செலவழிக்கப்படும் நிதியங்கள் மூலதனக் கொடைகளாக கருதப்பட்டுள்ளன ஆதலால் இவ் உருப்படிகள் மீதான பெறுமானத் தேய்வானது, அத் தேய்வினை ஆண்டுக்கான மொத்த தேய்வுக் கட்டணத்திற்கு எதிராக ஈடாக்கும் அதேவேளை உரிய மூலதன கொடைக் கணக்குகளில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

1.4.1 மானியக் கொடை

அரசாங்க மானியக் கொடைகளானவை, அக் கொடையானது பெற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் இணைந்த சகல நிபந்தனைகளும் இணங்கியொழுகப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, இனங்காணப்படும்.

உறப்பட்ட செலவுகளுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை, செலவுகள் இனங்காணப்படும் அதே காலப்பகுதியில் முழுமொத்த வருமானக் கூற்றில் வருமானமாக இனங்காணப்படும். சொத்து ஒன்றின் செலவுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை நிதி நிலமைக் கூற்றில் இனங்காணப்படும்.

1.4.2 செலவினம்

(அ.) உறப்படும் செலவுக்கும் குறித்த வருமான உருப்படிகளின் உழைப்புக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். இக் கம்பனியினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான மிகையினை அடையும் வருமானத்துக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

1.4.3 நிதிச் செலவினம்/ வருமானம்

முதலீடு செய்யப்பட்ட நிதியங்களின் மீது அட்டுறு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியினை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது.

1.5 காசுப் பாய்ச்சல் கூற்று

கணக்கீட்டு நியமங்கள் 7 இற்கிணங்க காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

1.6 அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

1.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்கள்

கம்பனியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்பட்ட திகதி வரையில், வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்களானவை கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட நியமங்களினதும் பொருள்கோடல்களினதும் இப் பட்டியல்படுத்தலானது எதிர்காலத் திகதி ஒன்றில் பிரயோகிக்கப்படும் போது வெளிப்படுத்தல்கள், நிதி நிலமை அல்லது செயற்றிறன் மீதான தாக்கம் ஒன்றினை கம்பனி நியாயமாக எதிர்பார்ப்பதாகவே உள்ளது. இந் நியமங்கள் செயல்வலுவுக்கு வரும் போது அவற்றைப் பின்பற்றும் உத்தேசம் கம்பனிக்கு உள்ளது.

(அ.) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 - நிதி ஆவணங்கள்:
வகைப்படுத்தலும் அளவீடும் என்னும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 ஆனது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனை பதிலீடாக்குவதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இல் வரையறுக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது. இந் நியமத்தின் கட்டாய செயல்வலுத் திகதியானது பிற்போடப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் முதலாவது கட்டத்தினைப் பின்பற்றுதலானது கம்பனியின் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் விளைவு ஒன்றினைக் கொண்டிருக்கும் ஆனால் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கம் எதனையும் சாத்தியமாகக் கொண்டிருக்காது. முழுமையானதோர் தோற்றப்பாட்டினை அளிக்கும் பொருட்டு ஏனைய கட்டங்களை வெளியிடும் போது அவற்றுடன் இணைந்த விளைவினைக் கம்பனியானது அளவிடும்.

1.8 விற்பனைக்கான நடைமுறை சாராத சொத்துக்கள்

தொடர்ந்து பாவிப்பதை விட முதற்படியாக கையுதிர்த்தல் ஒன்றுக்கூடாக மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடைமுறை சாராத சொத்துக்களானவை விற்பனைக்கு வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், இச் சொத்துக்களானவை இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்பட்டுள்ளன. அதன் பின்னர், இச் சொத்துகளானவை அவற்றின் கொண்டு செல்லல் தொகை மற்றும் விற்பனைக்கான கிரயம் கழித்த உண்மைப் பெறுமதி ஆகியவற்றிலும் குறைவாக அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதான ஆரம்ப வகைப்படுத்தல் மீதான சொத்துக் குறைவுறு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் பேரில் அடுத்துவரும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன. ஏதேனும் திரண்ட குறைவுறு நட்டத்தினை விடக் கூடுதலாக இலாபங்கள் இனங்காணப்படுவதில்லை.

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
02. வருமானம்		
வருவாய்	2,215,278,046.70	1,894,082,548
தேய்மானம்	56,379,502.03	55,316,859
சுபோஷ விற்பனை	523,214,500.95	232,322,965
ஹைலன்ட் உற்பத்தி விற்பனை	10,773,160.00	1,983,925
தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்தி விற்பனை	672,070.00	-
SDK உற்பத்தி விற்பனை	400,850.00	-
	2,806,718,129.68	**2,183,706,297**
03. நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திச் செலவு		
2018.01.01 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள்	24,913,203.12	34,050,018
மொத்த உற்பத்திச் செலவு	2,210,858,725.04	1,895,472,227
2018.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள்	(5,010,672.00)	(24,913,203)
	2,230,761,256.16	**1,904,609,041**
04. விற்பனைச் செலவு		
2018.01.01 ஆம் திகதிக்கு மீதி	13,650,007.36	-
வருவாய் - சுபோஷ	369,851,070.93	157,741,777
விற்பனை ஹைலன்ட் உற்பத்தி	9,146,060.75	1,974,605
கொள்வனவு - தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்திகள்	539,112.50	-
கொள்வனவு - SDK உற்பத்திகள்	428,161.80	-
விற்பனை - பொதியிடல் பொருட்கள்	38,000,336.23	21,993,438
	431,614,749.57	181,709,820
2018.12.31 ஆம் திகதிக்கு மீதி	(7,046,999.85)	(13,650,007)
	424,567,749.72	**168,059,812**
05 ஏனைய வருமானம்		
மட்பாண்ட விற்பனை	22,558,356.65	17,681,221
வீட்டுக்கடன் வட்டி	1,294,268.63	964,732
திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம்	7,012,927.20	8,027,274
நிலையான வைப்புக்களுக்கான வட்டி	5,130,950.89	1,375,210
வேறு	1,817,346.73	933,894
	37,813,850.10	**28,982,331**
06 விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்		
போக்குவரத்து அறவீடுகள்	14,107,435.66	10,696,895
சுபோஷ ஆரம்பித்தல் செலவுகள்	-	6,148,461
காட்சிக்கூட செலவினங்கள்	294,040.00	145,048
அச்சிடல் மற்றும் விளம்பர செலவுகள்	4,005,373.07	4,423,220
விற்பனை கொமிஸ் மற்றும் ஏனைய செலவுகள்	56,136.95	-
தேய்மானம்	1,248,000.00	-
	19,710,985.68	**21,413,625**

	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
07. நிர்வாகச் செலவுகள்		
சம்பளம்	9,652,304.99	8,657,441
ஊழியர் சேமலாப நிதியம்	2,191,187.73	1,918,230
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	484,801.52	430,309
மேலதிகநேரம்	2,356,408.34	1,854,989
கொப்பனவுகள்	3,709,809.64	4,402,694
அமைய சம்பளம்	1,032,524.97	189,533
அமய சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	219,499.92	41,333
அமய சம்பளம் மீதானஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	32,924.92	6,800
முகாமைத்துவ கொடுப்பனவு	8,366,493.42	5,478,402
ஊழியர் நலன்புரி	3,050,092.39	2,054,131
வரி மற்றும் கூலி	518,941.29	320,503
அலுவலக உபகரண பராமரிப்பு	900,647.37	1,456,958
பாதுகாப்புக் கட்டணம்	7,375,733.75	6,955,722
மோட்டார் வாகன பராமரிப்பு	2,782,471.10	1,823,139
பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு - வாகமன்	2,155,378.08	1,748,065
காகிதாதிகள்	1,806,301.82	2,132,294
அஞ்சல் செலவுகள்	355,000.00	271,405
தொலைபேசிக் கட்டணங்கள்	550,012.67	605,073
ஊழியர் பயிற்சி	13,010,300.28	4,342,465
சட்ட மற்றும் தொழிற் கட்டணங்கள்	882,495.00	587,475
அனுபத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள்	1,043,117.36	1,034,620
சுகாதார மற்றும் நலத்துறை	532,507.95	469,716
பிரயாணச் செலவு	210,150.00	83,600
நன்கொடைகள்	235,000.00	297,000
MKT சீருடை	88,000.00	-
ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	9,723,096.67	-
தேய்வு	6,075,433.94	7,398,375
	79,340,635.12	**54,560,274**
08 நிதி மற்றும் ஏனைய செலவுகள்		
வங்கிக் கட்டணங்கள்	53,190.56	39,580
நன்கொடைகள்	705,000.00	124,000
அகற்றல் செலவு	10,639,533.23	29,689
மீள் தயாரிப்புச் செலவு	112,656.25	2,356
	11,510,380.04	**195,624**
09 கொள்வனவு		
சோளம்	714,643,327.58	646,307,108
சோயா	512,146,729.05	383,301,820
பால்மா	373,102,650.00	346,032,000
கனியங்கள்	43,207,050.00	62,490,493
விற்றமின்	80,172,853.75	35,352,754
பொலித்தீன் பை	7,001,766.00	21,139,875
பொலித்தீன் ரீல்	50,890,355.29	49,234,014
கிராப்ட் காகிதப்பை	32,006,558.74	20,335,807
டுவைன்நூல்	233,082.20	392,455
	1,813,404,372.61	**1,564,586,324**

	2018.12.31 ரூபா சதம்	2017.12.31 ரூபா
10 நேரடி உழைப்பு மற்றும் முகாமைத்துவ செலவுகள்		
சம்பளம்	61,853,761.71	53,797,906
ஊழியர் சேமலாப நிதியம்	9,744,725.72	8,770,169
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	2,434,629.04	2,179,510
மேலதிகநேரம்	48,162,231.35	45,254,998
விசேடகொடுப்பனவு	28,343,241.80	32,668,217
பணிக்கொடை	5,663,671.10	9,185,605
சேவைத் தள கொடுப்பனவு	429,854.08	275,819
சீருடைகள் மற்றும் சலவை	4,185,068.82	3,008,960
தேனீர் மற்றும் பிற	3,906,123.00	3,309,276
முறைமாற்ற மற்றும் உணவுக் கொடுப்பனவு	2,197,984.00	2,108,281
சுகாதார மற்றும் நலத்துறை	1,017,481.86	804,335
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம்	5,576,686.50	5,303,976
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	878,297.24	316,485
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதானஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	204,391.37	115,535
ஊழியர் நல்ன்புரிச் செலவு	205,787.56	818,492
ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	12,457,819.51	10,684,319
	187,261,754.66	**178,601,881**
11 தொழிற்சாலை பொதுச் செலவுகள்		
மினசொர கொதிகலன் மற்றும் மின் பிறப்பாக்கி	41,398,428.38	29,923,937
தொழிற்சாலை பராமரிப்புக் கட்டணம்	66,045.95	64,081
பொறி மற்றும் இயந்திரங்கள் பராமரிப்பு	22,777,450.58	20,897,238
ஆய்வுகூட செலவுகள்	3,678,310.95	1,962,475
மின்சாரம்	32,717,280.45	28,037,764
கட்டிட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	2,774,122.08	3,497,475
வேறு சேவைகள் மற்றும் பராமரிப்பு	8,250,042.70	8,505,276
பூங்கா பராமரிப்பு	58,880.00	70,380
மெலிப்பு நட்டம்	87,285.00	66,287
தேய்வு	50,340,691.10	48,776,292
	162,148,537.19	**141,801,206**

12 ஆதனம்" பொறித்தொகுதி" உபகரணம்

செலவு / மீள்மதிப்பு	2018.01.01 ஆம திகதி மீதி	சேர்ப்பு	மாற்றீடு	அகற்றல்	2018.12.31 ஆம திகதி மீதி
காணி	220,000,000.00	-	-	-	220,000,000.00
கட்டடம்	134,724,456.26	2,357,390.75	-	(10,094,074.95)	126,987,772.06
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	397,077,324.77	44,607,195.80	6,516,736.20	(4,540,619.34)	443,660,637.43
மோட்டார் வாகனம்	25,695,000.00	4,800,000.00	-	-	30,495,000.00
உபகரணங்களும் கருவிகளும்	13,977,977.03	750,812.51	(6,659,857.99)	(361,697.50)	7,707,234.05
ஆய்வுகூட உபகரணங்கள்	8,492,747.85	1,092,549.02	24,000.00	(1,632,540.00)	7,976,756.87
கமத்தொழில் உபகரணங்கள்	138,650.00	-	(108,150.00)	(30,500.00)	-
மின்சார வேலைகள்	6,159,034.76	-	(116,300.00)	-	6,042,734.76
அலுவலக உபகரணங்கள் தளபாடங்களும்	17,803,882.38	613,229.99	(8,060,268.12)	(1,803,154.50)	8,553,689.75
பொருத்துகைகளும்	6,745,017.31	65,850.01	867,001.01	(76,410.00)	7,601,458.33
கணினி மற்றும் வன்பொருட்கள்	-	737,800.00	7,536,838.88	-	8,274,638.88
	830,814,090.36	**55,024,828.08**	**(0.02)**	**(18,538,996.29)**	**867,299,922.13**

திரண்ட பெறுமானத் தேய்வு	2018.01.01 ஆம திகதி மீதி	சேர்ப்பு	மாற்றீடு	அகற்றல்	2018.12.31 ஆம திகதி மீதி
கட்டடம்	21,382,098.92	6,274,510.43		(2,607,636.03)	25,048,973.32
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	98,162,958.06	41,696,736.22	5,938,470.23	(2,439,807.66)	143,358,356.85
மோட்டார் வாகனம்	16,776,500.00	3,642,000.00	-	-	20,418,500.00
உபகரணங்களும் கருவிகளும்	11,398,787.99	639,157.24	(6,069,394.67)	(361,550.82)	5,606,999.74
ஆய்வுகூட உபகரணங்கள்	2,930,292.60	740,289.55	5,400.00	(843,479.00)	2,832,503.15
கமத்தொழில் உபகரணங்கள்	71,635.83	-	(55,877.50)	(15,758.33)	-
மின்சார வேலைகள்	2,596,943.67	989,997.66	(46,480.03)	-	3,540,461.30
அலுவலக உபகரணங்கள் தளபாடங்களும்	5,893,435.19	828,158.37	(2,411,043.97)	(948,436.92)	3,362,112.67
பொருத்துகைகளும்	2,087,892.53	757,088.96	275,800.75	(40,837.08)	3,079,945.16
கணினி மற்றும் வன்பொருட்கள்	-	1,930,889.72	2,363,310.47	-	4,294,200.19
	161,300,544.79	**57,498,828.15**	**185.28**	**(7,257,505.84)**	**211,542,052.38**

பதிவழிப்பு பெறுமதி	2018.12.31 ஆம திகதி மீதி ரூ.சதம்	2017.12.31 ஆம திகதி மீதி ரூ.சதம்
காணி	220,000,000.00	220,000,000
கட்டடம்	101,938,798.74	113,342,357
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	300,302,280.58	298,914,367
மோட்டார் வாகனம்	10,076,500.00	8,918,500
உபகரணங்களும் கருவிகளும்	2,100,234.31	2,579,189
ஆய்வுகூட உபகரணங்கள்	5,144,253.72	5,562,455
கமத்தொழில் உபகரணங்கள்	-	67,014
மின்சார வேலைகள்	2,502,273.46	3,562,091
அலுவலக உபகரணங்கள் தளபாடங்களும்	5,191,577.08	11,910,447
பொருத்துகைகளும்	4,521,513.17	4,657,125
கணினி மற்றும் வன்பொருட்கள்	3,980,438.69	-
	655,757,869.75	**669,513,546**

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	2018.12.31 ஆம் திகதி ரூ.சதம்	2017.12.31 ஆம் திகதி ரூ.சதம்
13. அருவச் சொத்துக்கள்		
செலவு	661,187.57	661,188
திரண்ட தேய்மானம்	(495,890.67)	(330,594)
பதிவழிப்பு பெறுமதி	**165,296.90**	**330,594**
14. நடைபெறும் வேலை		
கழுவும் அறை நிர்மாணம்	517,145.26	-
கராஜ் மற்றும் ஓய்வு அறை நிர்மாணம்	21,996,484.14	-
	22,513,629.40	**-**

15 இருப்பு பொருட்கள்	31/12/2018 ரூபா சதம்	31/12/2017 ரூபா
மூலப்பொருள்		
கோதுமை	16,845,955.21	23,778,878
சோயா	39,872.25	61,829,570
கனியங்கள்	47,022,150.00	44,185,500
விட்டமின்கள்	4,074,650.00	6,175,200
பால்மா	11,471,825.00	895,879
	79,454,452.46	**136,865,026**
பொதியிடல் மூலப்பொருட்கள்		
பொலித்தீன் பைகள்	277,020.00	2,851,425
பல படுகை சவ்வு	4,558,058.78	6,478,914
கிராப்ட் கடதாசி பைகள்	4,121,568.00	442,319
டுவைன் நூல்	-	146,776
	8,956,646.78	**9,919,433**
வேறு		
டீசல்	3,138,130.00	2,490,425
பொறியியல் களஞ்சியம்	10,922,253.77	9,856,217
	14,060,383.77	**12,346,642**
செய்து கொண்டிருக்கும் வேலைகள்		
மூலப்பொருள்		
கோதுமை	10,858,790.67	535,500
சோயா	-	748,000
கனியங்கள்	997,500.00	263,250
விட்டமின்கள்	72,518.00	16,600
பால்மா	115,041.40	68,914
பொதியிடல் மூலப்பொருட்கள்		
பொலித்தீன் பைகள்	164,255.76	200,583
பல படுகை சவ்வு	155,064.40	345,543
கிராப்ட் கடதாசி பைகள்	242,402.32	201,906
டுவைன் நூல்	-	8,634
	12,605,572.55	**2,388,929**
முடிவுப் பெருட்கள்		
தாய்	2,927,067.56	17,521,889
சேய்	2,083,604.44	7,391,314
	5,010,672.00	**24,913,203**
சந்தைப்படுத்தல் பிரிவு		
சுபோஷ	856,168.93	8,333,724
பொதியிடல் மூலப் பொருட்கள்	5,846,977.92	5,140,009
ஹைலன்ட் உற்பத்தி	343,853.00	176,274
	7,046,999.85	**13,650,007**
மொத்தம்	**127,134,727.41**	**200,083,241**

	31/12/2018 ரூபா சதம்	31/12/2017 ரூபா
16 வர்த்தகம் மற்றும் ஏனைய வரவேண்டியவைகள்		
கடனாளிகள்	146,994,281.36	59,264,121
கடனாளிகள் - விற்பனை	29,753,237.30	45,902,857
முற்பணம் மற்றும் முன் கொடுப்பனவு	180,999.69	19,213,183
வைப்புக்கள்	1,976,000.00	1,876,000
வீட்டுக்கடன் - ஆதனக்கடன்	24,798,513.71	13,707,573
வீட்டுக்கடன் - இடர் கடன்	8,630,286.18	9,350,360
உற்சவ முற்பணம்	221,250.00	25,000
சுற்றுலா முற்பணம்	225,800.00	11,500
	212,780,368.24	**149,350,593**
17 பணமும் பணத்திற்கு சமமானவையும்		
கையிலுள்ள காசு	20,000.00	20,000
இலங்கை வங்கி ஜாஎல 71324617	29,691,454.54	13,530,026
இலங்கை வங்கி ஜாஎல 80306903	153,631,018.80	45,902,793
திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு	92,580,625.00	92,988,272
நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு	59,343,194.89	47,775,210
	335,266,293.23	**200,216,301**

18 வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

2010-06-23 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரிபோசா கம்பனியின் முகாமைத்துவம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 304,600,000/- ரூபாவைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்துடன் 2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது தாபிக்கப்பட்டது.

19 பிற்படுத்தப்பட்ட பொறுப்புக்கள்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	375,554,449.17	380,421,185
சுகாதார அமைச்சின் மூலதன நன்கொடை	47,609,531.03	50,450,123
மூலதன சொத்துக்கள் மற்றும் சுகாதார அமைச்சின் கழிக்குக: ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கட்டணம்	23,301,129.39	19,936,618
ஆண்டிறுதியில் மீதி	(56,379,502.03)	(55,316,859)
	390,085,607.56	**395,491,067**
20 ஒதுக்கங்களின் மீள் பெறுமதியிடல்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	306,378,657.65	307,170,028
ஆண்டில் மீள் பெறுமதியிடல் இலாபம் / நட்டம்	-	(791,370)
ஆண்டிறுதியில் மீதி	**306,378,657.65**	**306,378,658**
21 ஓய்வூதிய நலன்கள்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	42,956,779.00	37,858,776
கழிக்குக: ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்	(3,721,918.00)	(4,087,601)
2018 ஆண்டிற்கான நிதி ஏற்பாடு	5,663,671.10	9,185,605
ஆண்டிறுதியில் மீதி	**44,898,532.10**	**42,956,779**

கழிவு வீதம்	12%	12%
எதிர்கால சம்பளவேற்ற வீதம்	10%	10%
பதவியணி சுழற்சி	2%	2%
ஓய்வுபெறும் வயது	வருடம் 55	வருடம் 55

	2018/12/31 ரூபா சதம்	2017/12/31 ரூபா
22 மருத்துவ நிதியம்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	176,422.35	238,679
ஆண்டில் பங்களிப்பு	231,068.00	98,600
ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு	(198,043.57)	(160,857)
ஆண்டிறுதியில் மீதி	**209,446.78**	**176,422**
23 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		
கடன் தருநர்	133,075,718.12	59,782,065
திரண்ட செலவினம்	52,133.30	506,732
சுகாதார அமைச்சு - முன் பணம்	9,775.92	-
மீண்டும் செலுத்தப்படும் வைப்பு	54,243,237.50	48,503,238
சுகாதார அமைச்சு	2,358,590.90	22,033,801
	189,739,455.74	**130,825,836**
24 முன்னைய ஆண்டு செம்மையாக்கல்		
	-	
செலுத்த வேண்டிய கணக்குகளுக்கான செம்மையாக்கல்		27,633,145
செலவுக் கணக்குகளுக்கான செம்மையாக்கல்	-	235,139
	-	**27,868,284**

25 மூலதன கொடை சம்பந்தமான

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பெறுமானத்தேய்வு, இந்த ஆண்டின் மொத்த பெறுமானத்தேய்வுக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு உரிய மூலதனக் கொடை கணக்கிற்கு அறவிடப்பட்டுள்ளது.

26 பொறுப்புகளும் எதிர்பார்க்கப்படாதவைகளும்

அறிக்கையிடப்பட்ட திகதியில் எவ்வித வெளித்தெறியும் பொறுப்புகளோ அல்லது எதிர்பார்க்காத நிகழ்வுகளோ நடைபெறவில்லை

27 தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்

பிரதான முகாமையாளர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் பிரதான முகாமையாளர்கள் அதன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் ஆவர்.ஓ 2018 ஆம் ஆண்டு கலந்துகொள்ளும் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு முறையே ரூ. 525,000 மற்றும் ரூ. 138,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

ஏச்எஸ்எம்/எப்/எஸ்எல்டிசி /06/2018/08 2019 ஜூலை 09

தவிசாளர்,

இலங்கை திரிபோச கம்பனி.

இலங்கை திரிபோசா கம்பனியின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளரின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை திரிபோசா கம்பனியின் (கம்பனி) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று (வருமான செலவு கூற்று), உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஆரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்கள்ன தாக்கங்களை தவிர்த்து இலங்கை திரிபோசா கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைகளையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம், மறைமுகமான முறைமையப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சொத்துக்களின் நட்டக்கழிவு தொகையான ரூபா 87,285, அரச மானியத்தின் தீர்ப்பனவு தொகையான ரூபா 56,379,502 மற்றும் முதலீட்டின் மீதான வட்டி தொகையான ரூபா 5,183,872 என்பன சரிப்படுத்தப்படாமல் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலில் கணிப்பிடப்பட்டிருந்தது. நியமத்தின் 21 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையான வைப்பின் மீதான முதலீட்டு தொகையான ரூபா 9,400,000 நிலையான வைப்பின் மீள் பெறுதல் தொகையான ரூபா 1,500,000 மற்றும் காசாக பெறப்பட்ட வட்டி வருமானத் தொகையான ரூபா 4,885,125 தவிரிக்கப்பட்டு முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடப்பட்டு இருந்தது. காசாக பெறப்பட்ட ரூபா 70,910,660 அரச மானியத்திற்கான சரிப்படுத்தல்களை மேற்கொள்ளாது நிதியீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடப்பட்டு இருந்தது. காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 642,143 தொகையான முதலீட்டின் மீதான வட்டி வருமானத்தின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்த சம்பந்தப்படுத்த அதிகாரிகள் தவறிவிட்டார்கள்.

(ஆ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய நிலையான வைப்பின் மீதான ரூபா 1,540,426 தொகையான வட்டி வருமானம் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய நிலையான வைப்பின் மீதான ரூபா 1,286,504 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் வருமானமாக கருதப்படுகின்றது.

(இ) 31 திசெம்பர் 2018 இல் உள்ளவாறான அட்டுறு செலவு ரூபா 1,597,121 தொகையானது கணக்குகளில் எடுத்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் தெரிவிக்கப்பட்ட ஆண்டுடன் தொடர்புடைய செலவுகளாக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 91,425 தொகையானது 31 திசெம்பர் 2018 இல் உள்ளவாறான அட்டுறு செலவு கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நோக்கும் போது மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்கள் அறிவூட்டப்பட்டனர்.

02. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் 163(1) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேதவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படக்கூடிய தாக்கம் தவிர்ந்த கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, எனது விசாரணையின் போது தெரியவந்த விடயங்களுக்கு அமைய கம்பனி உரிய முறையில் நிதி அறிக்கைகளைப் பேணிவந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

- கம்பனியின் நிதி அறிக்கைகள் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவானதாகும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை அளவிலான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை குறிப்பிடுவதற்கு ஏதும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஆளுகை சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு கம்பனி தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடி அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படவில்லை.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கு தொடர்பு	**விபரம்**
(அ)	2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 03(அ) பிரிவு	2017 மார்ச்சிலிருந்து "சுபோசா" என பெயரிடப்பட்ட புதிய உற்பத்தியை அறிமுகப்படுத்துவதன் மூலம் உழைக்கப்பட்ட ரூபா 120,543,597 தேறிய இலாபம் மற்றும் திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலான ரூபா 12,143,878 வட்டி வருமானம் மீதான வருமான வரி பொறுப்பு தொடர்பில் கணிப்பிட்டு கணக்கீடுகளில் எடுத்துக் கொண்டு மற்றும் வரியினை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757	பொருள் அளவைச் சபை ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை நடாத்தப் பட்டிருக்கவில்லை.
(இ)	2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
	(i) 7.2 ஆம் பந்தி	கம்பனியின் கட்டுப்பாட்டு சூழலில் முக்கிய கூறுகளை மேவுகை செய்யும் வகையில் செயற்பாட்டு கையேடொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.
	(ii) 8.2.2 பந்தி	மிகை நிதியை முதலீடு செய்வதற்கு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பினும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூ.59,343,195 முதலீடு தொடர்பில் அவ்வாறான இணக்கம் பெறப்படவில்லை.

	(iii) 9.12 ஆம் பந்தி	பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மருத்துவ நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூறப்பட்ட நிதியின் மீதி ரூபா 209,447 ஆகும்.
(ஈ)	அரச பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டல் 4.2.1 மற்றும் பெறுகை கையேட்டின் 4.2.1 ஆம் பந்தி	மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்றும் மற்றும் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படவில்லை.

  - மீளாய்வாண்டிற்கான கர்ப்பிணி மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட 750 கிராம் திரிபோசா பக்கட்டுக்களின் தேவைப்பாடு 17,445,180 என்றாலும் 16,071,900 மட்டும் வழங்கல் செய்யப்பட்டிருந்தன. பிரதான நோக்கங்களில் மாறுபட்டதாக 750 கிராமுடைய 1,373,280 திரிபோசா பக்கட்டுக்கள் குறைவாக வழங்கல் செய்யப்பட்டிருந்தன. அதேநேரம், வர்த்தக நோக்கத்திற்காக சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 100 கிராம் , 250 கிராம் மற்றும் 750 கிராம் சுபோசா பக்கட்டுக்கள் முறையே 269,400 பக்கட்டுக்கள், 3,666,874 பக்கட்டுக்கள் மற்றும் 2,087,460 பக்கட்டுக்களாக விநியோகிக்கப்பட்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த கம்பனியின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் காலப்பிரிவுகளுக்கு ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைவாக கொள்வனவு செய்து பயன்படுத்தப்படவில்லை.

(அ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,790,732 மற்றும் ரூபா 3,650,000 செலவில் பணியாளர் ஓய்வு அறை மற்றும் கொதிகலன் அறை நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மற்றும் தெரிவிக்கப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச பெறுகை வழிகாட்டல்களின் 5.3.11 வழிகாட்டலின் பிரகாரம் பிணைமுறிகள் பெறப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகை வழிகாட்டல்களின் 5.4.4 வழிகாட்டலுக்கு நேர் எதிராக, முற்பண பிணை முறி பெறப்படாமல் பணிப்பாளர் ஓய்வு அறையை நிர்மாணிக்க 50 சதவீதம் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டலின் 5.4.6 வழிகாட்டலின் பிரகாரம் பிடிபணமானது உத்தரவு காலத்தை உள்ளடக்குவதாக தடுத்து வைக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு தேவையான 6,000 மெட்ரிக்தொன் சோயா பீன்ஸ் பெறுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட அமைச்சரவை பெறுகை குழு 2019 பெப்ரவரி 08 வரைக்கும் கூட பெறுகையினை நிறைவு செய்திருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டிற்கு தேவையான சோயா பீன்ஸ்களை மட்டுப்படுத்தப்பட்ட போட்டி கேள்வி மனுக்கள் மூலம் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. 2016 ஒக்தோபரில் இருந்து 2018 பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் சோயா பீன்ஸ் ஒரு கிலோகிராம் ரூபா 110 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி மாதத்திற்கு பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமனு செயற்பாட்டின்

மூலம் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 128.60 முதல் ரூபா 137.60 வரையான விலை வீச்சளவில் சோயா பீன்ஸ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) திரிபோசாவை பொதிசெய்வதற்கு அவசியமான 10,000,000 பொலித்தீன் பைகளுக்கான கொள்வனவு கட்டளை 2016 யூன் 29 இல் வழங்கப்பட்டிருந்தது. மற்றும் அதன் வழங்கல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூறப்பட்ட கொள்வனவு கட்டளை கணக்காய்வு திகதியான 2019 பெப்ரவரி 07 வரையிலும் கூட நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. செயலாற்றுகை பிணை முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2018 ஏப்ரல் 30 இல் காலாவதியாகியிருந்த போதீலும், செல்லுபடியாகும் காலப்பகுதியை நீடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சேதமடைந்த இழப்பீடுகளை மீட்டெடுப்பதற்கான நிபந்தனை உடன்படிக்கையில் கிடைக்கப்பெறாததால் சேதமடைந்த இழப்புக்களை மீட்டெடுக்க முடியாதிருந்தது.

(ஈ) 2017/2018 ஆம் ஆண்டுக்கான திரிபோசாவை பொதி செய்வதற்கு தேவையான 900,000 காகித பைகள் பெறுகைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பைகளின் முதல் பங்கு இருப்பினை 05 நாட்களுக்குள் மற்றும் முழுமையான இருப்புக்களை 03 மாதங்களுக்குள் வழங்கல் செய்யும் நிபந்தனையின் பேரில் ஒரு பை ரூபா 33.30 படி 300,000 காகிதப்பைபகளுக்கான கொள்வனவு கட்டளை இரண்டாவது மிகக்குறைந்த கேள்வி மனுதாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டளையானது 20 நாட்களுக்குப் பிறகு அதிகமாக வழங்கல் செய்யப்பட்டதுடன், கட்டளை இடப்பட்டிருந்த நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் 146,700 பைகள் மட்டுமே வழங்கல் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இழப்பீடுகளை மீட்டெடுப்பது தொடர்பாக எந்தவொரு நிபந்தனையும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இதன் விளைவாக இழப்பீடுகளை மீட்டெடுக்க முடியாதிருந்தது.

பைகளின் மாதாந்த சராசரி தேவைப்பாடு 31,000 இலிருந்து 60,000 வரையான வீச்சில் இருந்தது. 3 மாதங்களுக்கு பிறகு இருப்புக்களை சமர்ப்பிக்க தயாராகவுள்ள மற்றும் ஒவ்வொன்றும் ரூபா 28.32 என விலையினை சமர்ப்பித்திருந்த மிகக்குறைந்த கேள்வி மனுதாரருக்கு மீதமுள்ள 600,000 காகித பைகளுக்கான கொள்வனவு கட்டளையை வழங்க முடியுமாக இருந்த போதிலும், அதற்கு பதிலாக கேள்வி மனு மீள அழைக்கப்பட்டிருந்தது. ஆகையினால் ஒவ்வொரு பையும் ரூபா 45.25 அதிகரித்த விதத்தில் 300,000 பைகளை வழங்கல் செய்திருந்த வழங்குனரிடம் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. இதன் விளைவாக ஏற்பட்டிருந்த கூடுதல் செலவு ரூபா 10,158,000 ஆகும்.

03. வேறு அவதானிப்புகள்

(அ) 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான 600 மெட்ரிக் தொன் பால் பவுடர் பெறுகை தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மில்கோ நிறுவனம் சமர்ப்பித்த ஒரு கிலோ பவுடருக்கான மிகக்குறைந்த விலைமனு ரூபா 810 ஆனது சந்தை விலையை விட அதிக விகிதத்தில் இருந்தது. எனவே ஒரு கலந்துரையாடலுக்கு பிறகு விலையை குறைப்பதற்கு அமைச்சரவை முடிவு செய்திருந்தது. சந்தையில் காணப்படுகின்ற ஒரு கிலோ பால் பவுடரின் சாதாரண விலை ரூபா 690. இருப்பினும், மில்கோ கம்பனி ஒரு கிலோ ரூபா 798 இற்கு வழங்கல் செய்ய ஒப்புக் கொண்டது.

மில்கோ நிறுவனத்திற்கு ஒரு கிலோவுக்கு ரூபா 12 ஆல் குறைக்கும் வகையில் முடிவை கொண்ட கொள்வனவு கட்டளை 2018 ஏப்ரல் 18 வரை தாமதமாக அனுப்பப்பட்டிருந்தது. இதன் விளைவாக 2018 பெப்ரவரியிலிருந்து விலையை குறைப்பதனுடைய நன்மை ரூபா 1,055,100 தொகையானதை கம்பனி இழந்தது.

(ஆ) ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் வழங்குவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊழியர்களின் செயல் திறனை மதிப்பீடு செய்யாமல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 66,772,000 ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) உயர் கொள்ளளவுடைய புதிய அரைக்கும் இயந்திரத்தை வாங்கியதன் விளைவாக ரூபா 3,866,667 கிரயத்தினுடைய பழைய இயந்திரம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. ஆதனை உரிய முறையில் அகற்றப்படவில்லை.

(ஈ) மூலப்பொருள் இருப்பு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அதிஉச்ச, இழிவளவு மற்றும் மீள் கட்டளை மட்டங்கள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதனால், கொள்வனவு களஞ்சியமிடல் மற்றும் மூலப்பொருள் விநியோகம் என்பன முறையாக நடைபெற்றிருக்கவில்லை.

(உ) கடனுக்கு விற்பனை செய்வதற்கு முன்னர் நிதி வைப்பொன்று செய்யப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கடன்படுநருடன் செய்துகொள்ள வேண்டியிருப்பினும் அவ்வாறான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வுக்குரிய வருடத்தில் ஒரு கடன் படுநருக்கு ரூ. 10,329,790 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(ஊ) உற்பத்தி செயற்முறையுடன் தொடர்புபட்ட அனைத்து மூலப்பொருள் செலவுகளும் சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ஏற்பட்டவை. ஆகையினால் கழிவுகளை விற்பனை செய்வதால் உருவான வருமானம் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் கழிவுகளை விற்பனை செய்ததன் வருமானம் ரூபா 22,558,357 தொகையானது கூறப்பட்ட நிதியில் செலவு வைக்கப்படாமல் ஊக்குவிப்பு படிகள் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து நியதிச்சட்ட நிறுவனங்களும் செயற்பட வேண்டும் மற்றும் மீளாய்வாண்டிற்கான அவற்றின் எல்லைக்குட்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து கம்பனி அறிந்திருக்கவில்லை ஆகவே 2030 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பற்றி கம்பனி அறிந்திருக்காத காரணத்தினால் மற்றும் அவற்றின் எல்லையின் கீழான குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அடைவுகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி